நியமிக்கப்படுவதாக ஒரு சுற்றறிக்கை அனுப்பியிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார். மத்திய அரசாங்கம் அந்த சுற்றறிக்கையை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பியதன் வாயிலாக, உச்ச நீதிமன்றம் தானாகவே முன்வந்து, அந்த சுற்றறிக்கையை ஒரு வழக்காகப் பதிவு செய்து, அந்த வழக்கின் விவரங்கள் குறித்து அனைத்து மாநில அரசுகளுக்கும், அனைத்து மாநிலங்களில் உள்ள உயர் நீதிமன்றங்களுக்கும் அந்த வழக்கிலே பதில் அளிக்க வேண்டுமென்று, விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினை குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவுடனே, துறையின் சார்பாக உயர் நீதிமன்றத்திற்கு இதுகுறித்து விவரம் கேட்டு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதுவரையில் இதற்கு விவரம் வரவில்லை. நான் துறையில் விசாரித்தவரையில், இதுவரை உச்ச நீதிமன்றத்திலிருந்து எந்தவித விளக்கமும், நோட்டீசும் அரசாங்கத்திற்கு வரவில்லை. அவ்வாறு வந்து சேர்ந்தவுடன், கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாநில சுயாட்சியைக் காக்கின்றவகையிலே, நம்முடைய உரிமையை விட்டுக் கொடுக்காத அளவிலே, கண்டிப்பாக மத்திய அரசாங்கத்திற்கு அரசின் சார்பாகவும் அழுத்தம் கொடுக்கப்படும். மாநில உரிமையைக் காப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் எப்படி உச்ச நீதிமன்றத்தில் போராடி பல வெற்றிகளைப் பெற்றுத் தந்தார்களோ, (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று உச்ச நீதிமன்றத்திலே, மூத்த வழக்கறிஞரை வைத்து, வாதாடி கண்டிப்பாக நம்முடைய மாநிலத்தினுடைய உரிமையைக் காப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. கவன ஈர்ப்பு

(அ) தருமபுரி மாவட்டம், பன்னிகுளம் கிராமத்தில் கோழிப் பண்ணைக் கழிவுகளால் சுற்றுச்சூழல் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். முருகன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது

2017 ஜூலை 13] [பேரவைத் தலைவர்]

முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன் அவர்கள்.

திரு. மு. திராவிடமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் என்னுடைய ஆய்விலே இருக்கிறது; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதை என்னுடைய அறையில் வந்து கேளுங்கள். நீங்கள் அதை அவையில் கேட்டால், உங்களுக்கு பதில் கிடைக்காது; உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன் அவர்கள்.*

***திரு. பெ. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், பன்னிகுளம் கிராமத்தில் உள்ள* P.K.P. *கோழிப்பண்ணைக் கழிவுகளால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

திருவாளர்கள் பி.கே.பி. பீட் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் (பவுல்டரி டிவிஷன்), (PKP FEED MILLS PVT LTD–POULTRY DIVISION), *தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், பன்னிகுளம் கிராமம், புல எண் 178/1, 193, 194/1*A, *194/2, 195/1*A, *195/1*B*–ல் அமைந்துள்ளது. இக்கோழிப் பண்ணை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் 1–9–2012 முதல் தொடங்கப்பட்டன.*

[திரு. கே.சி. கருப்பணன்] [2017 ஜூலை 13

1. இக்கோழிப் பண்ணையில் முட்டையிலிருந்து பொரித்த கோழிக் குஞ்சுகளை கொண்டுவந்து, அதனை இக்கோழிப் பண்ணையில் குறிப்பிட்ட காலத்திற்கு வளர்த்து, நன்கு வளர்ந்த கோழிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

2. இக்கோழிப் பண்ணை செயல்படும்போதும், கோழிக் குஞ்சுகள் வளரும்போதும், அவை இடும் எச்சத்தினால் ஈ தொந்தரவுகள் வருவதாகவும், சுகாதாரம் பாதிக்கப்படுவதாகவும் பொது மக்களிடமிருந்து 4–2–2013 அன்று புகார் மனு பெறப்பட்டது.

3. இதனைத் தொடர்ந்து, தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விடுத்த உத்தரவின்படி, 5–2–2013 மற்றும் 6–2–2013 அன்று துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) தருமபுரி, வருவாய்க் கோட்டாட்சியர் அரூர், வட்டாட்சியர் அரூர், உதவிப் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின்போது, மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் உரிமம் பெறாமல் செயல்படுவதும், கோழிப் பண்ணையில் சேமிக்கப்படும் எச்சத்தினால் துர்நாற்றம் வீசுவதும் கண்டறியப்பட்டது. எனவே, இக்கோழிப் பண்ணை உரிமையாளருக்கு 7–2–2013 அன்று முகாந்திரம் கோரி, விளக்கம் கேட்கும் கடிதம் அனுப்பப்பட்டது. இதனை எதிர்த்து அந்நிறுவனத்தினர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண் W.P. No.3365 of 2013 மற்றும் W.P. No.10063 to 10065 of 2014 தொடர்ந்து, சம்பந்தப்பட்ட துறையினர் மேல்நடவடிக்கை எடுக்க வேண்டாமென இடைக்காலத் தடை பெற்றனர். இந்த இடைக்காலத் தடை 2017 வரை நீட்டிக்கப்பட்டது. மேலும், உயர் நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட துறைகள் அளித்த உத்தரவாதத்தின் அடிப்படையிலும், எதிர்காலத்தில் வரும் பாதிப்பு குறித்து பதிவானதாலும், இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

4. இக்கோழிப் பண்ணை 3–5–2013 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் நிறுவுதல் இசைவாணை பெற விண்ணப்பித்தது. இந்தக் கோழிப் பண்ணையில் கட்டுமானப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்ததால், நிறுவுவதற்கான இசைவாணை 10–5–2013 அன்று வழங்கப்பட்டுள்ளது. கோழி வளர்ப்பு ஒரு தொகுதிக்கு (Batch) 40,000 கோழிக்

குஞ்சுகளும், நாளொன்றுக்கு 1,36,000 முட்டைகளும் உற்பத்தி செய்ய இசைவாணை வழங்கப்பட்டுள்ளது.

5. இந்நிறுவனத்திலிருந்து தொழிற்கழிவுநீர் எதுவும் வெளியேற்றப்படவில்லை. அன்றாடக் கழிவுநீர் சுமார் 1.35 கி.லி. வெளியேற்றப்பட்டு, செப்டிக் டேங்க் மற்றும் சோக் பிட் வழியாகச் சுத்திகரிக்கப்படுகிறது.

6. இக்கோழிப் பண்ணை செயல்படும்போது, நாளொன்றுக்கு சுமார் 0.75 டன் திடக் கழிவுகள் (எச்சம்) வெளியேற்றப்படுகிறது. இதிலிருந்து வெளிவரும் துர்நாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்காக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திடக் கழிவுகள் உடனுக்குடன் வெளியேற்றப்பட்டு, விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருவதால், துர்நாற்றம் ஏற்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

7. நாளொன்றுக்கு சுமார் 10 கோழிக் குஞ்சுகள் இறப்பதால், கோழிப் பண்ணை வளாகத்திலேயே வாரிய விதிகளின்படி, ஆழமான குழியில் புதைக்கப்பட்டு வருவதால், துர்நாற்றம் வீசுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

8. கோழிப் பண்ணை சுகாதாரம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மேம்படுத்தியுள்ளதால், சுமார் ஒன்றரை வருட காலமாக பொது மக்களிடமிருந்து புகார்கள் எதுவும் பெறப்படவில்லை. ஈக்களால் ஏற்படும் சுகாதார பாதிப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

9. இந்நிறுவனம் பெற்ற இசைவாணை 9–5–2015 அன்று காலாவதியானது. சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்ததாலும், சம்பந்தப்பட்ட நிறுவனம் செயல்படுவதற்கான இசைவாணையைப் பெற விண்ணப்பிக்காத காரணத்தினாலும், இயக்குதல் இசைவாணை வழங்கப்படவில்லை.

10. மேலும், இந்நிறுவனம் கால்நடைப் பராமரிப்புத் துறையின் தடையில்லாச் சான்று பெற்று செயல்பட்டு வருகிறது.

தற்போது, சென்னை உயர் நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. எனவே, இந்நிறுவனத்தினர், வாரியத்தின் இயக்குதல் இசைவாணை பெற

[திரு. கே.சி. கருப்பணன்] [2017 ஜூலை 13

அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும், இந்நிறுவனத்தினை வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பழனியப்பன் அவர்கள்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். இந்தக் கோழிப் பண்ணை, 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அப்போது 10 அடுக்குகள் கொண்ட அந்தக் கோழிப் பண்ணையில், 7 இலட்சம் கோழிகள் இருந்தன. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விவர அறிக்கையைப் படித்துப் பார்க்கிறபோது, தற்போது அங்கே 1,60,000 கோழிகள்தான் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், பொது மக்களிடமிருந்து எந்தவிதமான புகார்களும் அந்தக் கோழிப் பண்ணை குறித்து வரப்பெறவில்லை என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 2012–ல் ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கோழிப் பண்ணை குறித்து 2013 ஆம் ஆண்டு பொது மக்களிடமிருந்து புகார்கள் வந்ததால், நான் அந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று பார்த்தேன். என்னுடைய தொகுதியைச் சார்ந்த கிருஷ்ணாபுரம் ஊராட்சி இருக்கிறது. மேலும், நம்முடைய அரூர் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ஆர். முருகன் அவர்களின் தொகுதியைச் சார்ந்த பன்னிகுளம் ஊராட்சி இருக்கின்றது. காரிமங்கலத்தைச் சேர்ந்த முருக்கம்பட்டி என்ற மூன்று ஊராட்சிகளும் உள்ளன. அந்த மூன்று ஊராட்சிகளிலும் உள்ள மக்கள் சாப்பிடுகிறபோது, அந்தக் கோழிக் கழிவுகளால் ஏற்படுகிற, முட்டையின் மூலமாக வருகிற larva–வின் மூலமாக, அந்த உணவின்மீது ஈ மொய்த்துக்கொள்ளும். அதோடு மட்டுமல்லாமல் குடிக்கின்ற தண்ணீரிலும் அதிகமாக ஈக்கள் மொய்த்துக்கொள்ளும். அந்தப் பகுதி மக்களுக்கு மிகவும் பாதுகாப்பற்ற, சுகாதாரமற்ற ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது என்று கூறி, அந்தப் பகுதி மக்கள் எல்லாம் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்கள்மீது இன்றுகூட வழக்குகள் இருக்கின்றன. ஆனால், தற்போது கோழிகளினுடைய அளவு குறைந்ததனால், ஈக்களினுடைய அளவும் குறைந்திருக்கின்றது. நானும் சட்டப் பேரவை உறுப்பினர் என்கின்ற வகையில் அந்தப் பகுதிக்கு ஏதாவது ஒரு விசேஷத்தில் கலந்துகொண்டு அல்லது யாருடைய வீட்டிற்கோ சென்று உணவருந்துகின்ற நேரத்தில் உணவின்மீது இதுபோன்ற ஈக்கள் அதிகமாக மொய்க்கின்றன. இங்கு இரண்டு

2017 ஜூலை 13] [திரு. பெ. பழனியப்பன்]

விஷயங்களை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும். ஒன்று—ஈக்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தியாக வேண்டும். இரண்டாவது—அந்தக் கோழிக் கழிவுகளை எரிக்கும்போது துர்நாற்றம் அங்கே வீசுகிறது. ஆகவே, அந்தப் பகுதி மக்கள் சுகாதாரத்தோடு இருக்க தொடர்ந்து அரசு நல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்போது எப்படி நம்முடைய மாவட்ட நிருவாகம் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எல்லோரும் அந்தப் பகுதிக்குச் சென்று தீவிர விசாரணை செய்து, ஒரு நல்ல நடவடிக்கையை எடுத்திருக்கின்றார்களோ, அதேபோன்று, எதிர்காலத்தில் இதுபோன்ற நிலை வராத அளவிற்கு அரசு தொடர்ந்து பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

திரு. பெ. பழனியப்பன்: ஆகவே, அந்தப் பகுதி மக்கள் சுகாதாரத்தோடு இருக்க தொடர்ந்து அரசு நல்ல நடவடிக்கை எடுத்து, இனிமேல் அதுபோன்ற நிலை வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6–2–2013 அன்று இந்தப் பிரச்சினையின் தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் உத்தரவின்படி, வருவாய் கோட்டாட்சியர், அரூர் வட்டாட்சியர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய உதவிப் பொறியாளர், ஆகியோர் அங்கு சென்று ஆய்வு செய்து, அந்தக் கோழிப் பண்ணையினுடைய சிறு குறைபாடுகளையெல்லாம் சரி செய்வதற்காக விளக்கம் கேட்கும் நோட்டீஸ் அனுப்பப்பட்டது. உடனே அந்த நோட்டீஸை எதிர்த்து, 7–2–2013 அன்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து, அந்த வழக்கு 2017 வரை நிலுவையில் இருந்து, இப்போது முடிக்கப்பட்டுள்ளது. அதன்பின் நேரடியாக அந்தக் கோழிப் பண்ணைக்குச் சென்று அவர்களிடத்தில் இந்தக் குறைபாடுகள் எல்லாம் இருக்கக் கூடாது; இதை நீங்கள் சரிசெய்ய வேண்டும் என்று சொல்லி, கோழிப்

[திரு. கே.சி. கருப்பணன்] [2017 ஜூலை 13

பண்ணையில் ஈக்கள் பரவாமல் தடுப்பதற்காக Larvadex என்ற ஒரு மருந்தைக் கோழிகளுக்குக் கொடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதைக் கோழிகள் உட்கொள்ளும்போது அந்த எச்சத்தில் ஈக்கள் உட்கார்ந்து முட்டையிடுகின்றன. அப்போது அந்த முட்டைகள் எல்லாம் அழிக்கப்பட்டுவிடுகின்றன என்று அவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இந்த மருந்தானது 4 முதல் 6 வாரங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். 100 கிலோ கோழித் தீவனத்தில் 1 கிலோ மருந்தை சேர்த்துக்கொடுத்தால், கோழிப் பண்ணையில் ஈக்களின் தொல்லைகள் முற்றிலும் தவிர்க்கப்படும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) திருமயம் தொகுதி, பொன்னமராவதியில் உள்ள விசைத்தறிக் கூடத்தினை மீண்டும் இயக்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி அவர்கள்.

*__திரு. எஸ். ரகுபதி:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திருமயம் தொகுதி, பொன்னமராவதியில் உள்ள விசைத்தறிக் கூடத்தினை மீண்டும் இயக்க வேண்டியதன் அவசியம்” குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்த விரிவான விவர அறிக்கை ஒன்று பேரவையின்முன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.